கிறார்கள். அரசு மிகுந்த அக்கறையோடு கவனித்து வருகிறது என்பது மட்டுமல்ல, அமைதிக்கும் பங்கம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் காவல் துறை கண்காணிப்போடு எச்சரிக்கை யோடு இருக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இது அன்றாடப் பிரச்சினை, இதற்காக இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை இல்லை. இத்தீர்மானத்திற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற் கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) கவன ஈர்ப்பு

(அ) குமரி மாவட்டத்தில் உணவுப் பொருள் வழங்கும் துறைமூலம் வழங்கப்பட்ட அரிசியின் விலை உயர்வுகுறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் மாண்புமிகு உணவு-வணிக வரித் துறை அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு ஒரு பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the rapid rise in prices of rice supplied through the Civil Supplies Agency in the month of June 1971 in Kanyakumari district.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே 1964-ம் ஆண்டு தென் மாநிலங்கள் (அரிசி ஏற்றுமதியை முறைப்படுத்தல்) ஆணையின் விதித்துறைகளுக்கிணங்க, 15 மைல் சுற்றளவுக்குள், இம் மாநிலத்துக்கும், கேரள மாநிலத்துக்கும் இடைப்பட்ட எல்லைப் பகுதிகளில் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நெல், அரிசி எடுத்துச் செல்வது, அனுமதிச் சீட்டுகள்மூலம், முறைப்படுத்தப்படுகிறது. நகரைச் சுற்றியுள்ள இந்தப் பகுதிகளில் தானியங்களைச் சேமித்து வைத்து, முடிவாகக் கேரள மாநிலத்துக்குக் கள்ளத்தனமாக ஏற்றி யனுப்புவதைத் தடுப்பதே இந்தக் கட்டுப்பாட்டு விதிமுறையின் நோக்கமாகும். ஒரு பகுதியின் தேவைகளையொட்டி, அனுப்பப்பட வேண்டிய அளவுகள் உள்ளூர் உற்பத்தியையொட்டி முடிவு செய்யப் படுகின்றன. இவ்வாறு மதிப்பிடப்பட்ட மொத்த வரம்புக்குட்பட்டு, அந்தப் பகுதியிலுள்ள வணிகர்களுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்கப் படுகின்றன.

இந்த முறையினையொட்டி, கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங் கோடு வட்டத்தில் அனுமதி பெற்ற சில்லறை வணிகர்களுக்கு அரிசியைப் பகிர்ந்தளிப்பதில் மொத்த வணிகர்களாகச் செயல்பட இரண்டு கூட்டுறவு நிறுவனங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்குள் அரிசி இருப்புக்களை எடுத்துச் செல்ல மொத்த

1971 சூலை 9] [திரு. ப. உ. சண்முகம்]

வணிகர்களே அனுமதிக்கப்படுகின்றனர். நகரைச் சுற்றியுள்ள பகுதியில் அரிசி இருப்புகளை ஏற்றியனுப்ப பெருவாரியான சில்லறை வணிகர்கள் அனுமதிக்கப்பட்டால், இவ்வாறு அரிசி ஏற்றியனுப்பப் படுவதைத் தடுக்க இயலாது. அனுமதியின்றி அரிசி இருப்புகளை ஏற்றியனுப்புவதைச் செவ்வையாகத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

மொத்த வணிகர்கள் ஏனைய மாவட்டங்களில் வெளிச்சந்தையிலிருந்து, தங்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு அரிசி கொள்முதல் செய்கின்றனர். அடக்க விலையையொட்டி அவ்வப்போது அரிசி விலைகளை முடிவு செய்வதன்மூலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இதைக் கட்டுப்படுத்துகிறார். ஆகவே, விளவங்கோடு வட்டத்தில் அரிசிப் பங்கீட்டை உணவுப் பொருள் வழங்குதுறை செய்வதில்லை. மேலும், உணவுப் பொருள் வழங்கு துறை நியமித்துள்ள எந்த நிறுவனத்தின் வாயிலாகவும் அரசின் அரிசி இருப்புகளிலிருந்து இந்த வட்டத்தில் அரிசிப் பங்கீடு செய்யப்படுவதுமில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து அரிசியை வழங்குவதில் தற்காலிக இடையீடு ஏற்பட்டு அதனால் இடர்ப்பாடு ஏற்படும்போதுமட்டுமே அரசு அரிசி இருப்புகள் கிடைப்பதைப் பொறுத்து அனுப்பப்படுகின்றது. ஆனால் வழக்கமாகவே இவ்வாறு அனுப்பப்படுவதில்லை.

விளவங்கோடு வட்டத்தில் முடிவு செய்யப்பட்ட அரிசி விற்பனை விலைகள் பின்வருமாறு :—

	75 கிலோகிராம் கொண்ட மூட்டையின் மொத்த விற்பனை விலை.	ஒவ்வொரு கிலோ கிராம் அரிசியின் சில்லறை விலை.
	ரூ.	ரூ.
21—4—1970லிருந்து	81·75	1·12
7—5—1970லிருந்து	77·75	1.08
14—4—1971லிருந்து	74·75	1·04
16—5—1971லிருந்து	77·25	1·07
25—5—1971லிருந்து	83·00	1·15

விலைகளில் காணும் வேறுபாடுகள் பருவங்களுக்கேற்ப வேறுபடும். முக்கிய அறுவடையைத் தொடர்ந்து விலைகள் சரிந்தன. ஜூலை—செப்டம்பரில் ஏற்பட்ட விலை உயர்வு பருவ மாறுபாட்டினால் ஏற்பட்டதாகும். இந்த வேறுபாடும் ஆண்டுதோறும் ஏற்படுவதாகும். கடந்த ஆண்டு மே திங்களில் நிலவிய மிக உயர்ந்த விலைகளையொட்டித் தற்போதுள்ள விலைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, கடந்த ஆண்டின் விலைகளைவிட இவை மிக அதிகமானவையல்ல. (நாகர்கோவிலில்) நடப்பாண்டில் வெளிச்சந்தையில் உள்ள விலைகள் பின் வருமாறு :—

			கிலோ ஒன்றுக்கு
			ரூ.
வசரமுண்டன்	..		1 19
கோவை-25	..	..	1·19
கார் சம்பா	..	..	1·16
ஐ. ஆர். 8	..	..	1·16

இதிலிருந்து விளவங்கோடு வட்டத்தில் உள்ள விலைகள் இம் மாவட்டத்தில் ஏனைய இடங்களில் காணப்படும் விலைகளைவிட அதிக மில்லை என்பதைக் காணலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தந்த புள்ளி விவரத்திலிருந்து மே மாதத்திலிருந்து ரூ. 83 என்ற அளவிற்கு விலை கூடியிருப்பதாகக் கூறினார்கள். அதிலும் குறிப்பாக விளவங்கோடு தாலுக்காவில் அடையாளக் கார்டு வினியோகிக்க வேண்டுமென்று கலெக்டர் அரசாங்கத்திற்கு எழுதி யிருப்பதாகச் சொன்னார்கள். அதன்பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் விளக்குவாரா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் என்ன வென்றால், அங்கு அரசாங்க சார்பில் அடையாளக் கார்டு கொடுப்பது இயலாது, ஆங்காங்கு இருக்கும் சில்லறை வியாபாரி களே அங்கே இருக்கும் வாங்குவோர்களுக்கு அடையாளக் கார்டு கொடுத்து விற்பனை செய்ய வேண்டுமென்று உத்தரவு போடப் பட்டிருக்கிறது. அதையொட்டி, அவர்களே இந்த ஏற்பாட்டைச் செய்து இருக்கிறார்கள். அந்த ஏற்பாட்டில் எந்த குந்தகமோ, கேடோ வந்துவிட்டதாக மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரிடமிருந்து அரசுக்கு தகவல் வரவில்லை. இந்த நேரத்தில் நான் ஒன்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அண்டை மாநிலத்திற்கு கள்ளத்தனமாக அரிசி கடத்திச் செல்வதை தடுப்பதற்கு அரசாங்கத்தோடு துணை நின்று உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வேண்டு கோளை இந்த நேரத்தில் நான் விடுவது பொருத்தம் என்று கருது கிறேன்.

(ஆ) கல்லூரிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் இடம் பெறுவதில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்பாட்டைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து.

DR .H. V. HANDE: Sir, I wish to call the attention of the Hon. Minister for Education and Local Administration to a matter of urgent public importance, namely, the difficulty of a large section of the students in getting admission into colleges and High Schools and the need to take immediate and adequate steps to tackle this problem.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர் களே, கல்லூரி அளவில் கல்வி வசதிகளை விரிவுபடுத்து வதற்குப் போதுமான நடவடிக்கைகளை அரசு எடுத்துவந்துள்ளது; அண்மை ஆண்டுகளில் இத்தலைப்பின் கீழ் திட்ட இலக்குகளும் நிதி ஒதுக்கீடும் படிப்படியாக உயர்த்தப்பட்டு வந்துள்ளன. 1966–67 இல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 105 (அரசுக் கல்லூரிகள் 27, மானியம் பெறும் கல்லூரிகள் 78) 1966–67 முதல் 1969–70